2024 ஜூன் 25] [திரு. மு.க. ஸ்டாலின்]

அதேபோல, கடலூர் மாவட்டத்தில் ஆதிவராகநத்தத்தைச் சேர்ந்த சீதா என்பவர் 15-6-2014 அன்று கொலை செய்யப்பட்டதையடுத்து, தொடர்புடைய குற்றவாளிகள் 16-7-2014 அன்று கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த வழக்கின் விசாரணையை, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு வேகப்படுத்தி 29-2-2024 அன்று குற்றவாளிகளுக்கு இரட்டை ஆயுள் தண்டனை பெற்றுத் தரப்பட்டுள்ளது.

எனவேதான், நான் முன்பு தெரிவித்தபடி, இதுபோன்ற குற்றங்களில் வழக்குகளை முறையாக நடத்தி, குற்றவாளிகளைச் சட்டத்தின்முன் நிறுத்தி தண்டனை பெற்றுத் தருவது என்பது, புதிய சட்டங்களை இயற்றுவதைவிட சரியானதாக இருக்கும் என்று இந்த அரசு கருதுகிறது.

இந்தக் குற்றங்களை வெறும் குற்றவியல் நிகழ்வாக மட்டும் பார்க்காமல், இதன் சமூகப் பொருளாதார பின்னணிக் காரணிகளை வைத்து அவற்றை ஆராய்ந்து பார்க்கும்போது, குற்றவாளிகளுக்குத் தண்டனையைப் பெற்றுத் தருவது ஒருபுறம் இருந்தாலும், சமுதாயத்தில் பொருளாதார வளர்ச்சியின் மூலமாக பெண் கல்வி உயரும்போதும், கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பில் ஒரு வளர்ச்சி பெற்ற சமுதாயமாக உயரும்போதும் இதுபோன்ற குற்றங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறையும்.

அதுபோன்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவதிலும் நாம் கவனம் செலுத்தி வருகிறோம். அதன் காரணமாகவே, நாம் நடைமுறைப்படுத்தக்கூடிய புதிய திட்டங்களில் எல்லாம் பெண்களின் வாழ்க்கையை, வாழ்வாதாரத்தை, கல்வியை, அவர்களது உரிமைகளை மேம்படுத்தும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து வருகின்றோம்.

எடுத்துக்காட்டாக, புதுமைப் பெண் திட்டம், பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை, மகளிருக்கு இலவச பேருந்துப் பயணம், (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சி அமைப்புகளில் 33 விழுக்காடு இடஒதுக்கீடு என்று சொல்லிக்கொண்டே போகலாம். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றையெல்லாம் நாம் தொடர்ந்து கொண்டு செல்லும்போது சமூகத்தில் மனமாற்றம் ஏற்படும். புதிய புதிய சட்டங்களுக்கான தேவையும் குறையும். அதை நோக்கித்தான் இந்த அரசு பயணிக்கிறது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2024 ஜூன் 25 முற்பகல் 10–45

இருப்பினும், தற்போது நமது இலக்கு சற்று தொலைவில் இருப்பதாகத் தோன்றினாலும், நடைமுறையில் இன்று சந்தித்துவரும் சமூகரீதியிலான பிரச்சினைகளை, அதன் விளைவுகளை இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல உடனடியாக எதிர்கொள்ளவும், அதற்கொரு தனி முக்கியத்துவம் அளிக்கும் விதமாகவும், சாதி மறுப்புத் திருமணம் தொடர்பான அனைத்து வகைக் குற்றங்களிலும் வழக்குகளை விரைந்து நடத்திட, அரசுத் தரப்பில் பிரத்யேகமாக சிறப்பு குற்றவியல் வழக்கறிஞர்கள் (Special Public Prosecutors) நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, தற்போது இதுபோன்ற குற்றங்களில் எல்லாம், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி காவல் ஆய்வாளர் விசாரணை அலுவலராக நியமிக்கப்படுகிறார். ஆனால், இவ்வழக்குகளில் விசாரணையின் தன்மையை மேலும் தீவிரப்படுத்தும் வகையிலும், வேகப்படுத்தும் நோக்கிலும் விசாரணை அலுவலராக காவல் துறை துணைக் கண்காணிப்பாளரை நியமிப்பது குறித்து சட்ட ஆலோசனையைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது குறிப்பிட்டதைப்போல, இக்குற்றங்களைக் குறைக்கும்வகையில் மாவட்ட அளவிலான குழுக்கள், அவை அமைக்கப்பட்டதன் பின்னணி மற்றும் அவற்றின் செயல்பாடுகள் எவ்வாறு இருந்தன என்பதைப் பற்றியெல்லாம் மீண்டும் ஆய்வு செய்து, அதுகுறித்தும் தேவையான முடிவுகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக இந்த அவைக்குத் தெரிவித்து அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. விதி 110–ன்கீழ் அறிக்கை

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில், பல்வேறு அரசு பணியாளர் தேர்வாணையங்கள் மூலமாக ஜனவரி 2026-க்குள் 75,000-க்கும் மேற்பட்ட பணியிடங்களை நிரப்புதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

2024 ஜூன் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இளைஞர் நலனை, இளைஞர்களின் எதிர்காலத்தை, இளைஞர்களின் மேன்மையை எப்போதும் மனதில் வைத்து திட்டங்களைத் தீட்டி வருவது திராவிட மாடல் ஆட்சியின் தனித்தன்மை! இளைய சக்தியை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்திக்கொள்ளும்வகையில், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் மிக மிகக் கவனமாகச் செயல்பட்டு வருகிறோம். அதனை அடிப்படையாகக் கொண்ட அறிவிப்பைத்தான் இப்போது வெளியிட விரும்புகிறேன்.

வளமான அரசாக, அமைதியான அரசாக தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. தொழில் வளம் நிறைந்த தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அதன்மூலம் நமது இளைஞர்கள் வேலைவாய்ப்புகளைப் பெற்றிடவும் பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிறோம். நமது மாணவச் செல்வங்களுக்குத் தரமான பள்ளிக் கல்வியையும், உயர் கல்வியையும் அளிக்கின்றோம். அத்துடன் அவர்களது வேலைவாய்ப்புகளைப் பெருக்கிடும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. கல்வியின் மூலமாக ஓர் அறிவுசார் பொருளாதாரத்தை நாம் உருவாக்கி வருகிறோம்.

இவற்றை மனதில் கொண்டு உருவாக்கப்பட்டவைதான் புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், நான் முதல்வன் போன்ற திட்டங்கள். அடுத்த தேர்தலை அல்ல, அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்திக்கும் அரசுதான் நமது திராவிட மாடல் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) கழக அரசுப் பொறுப்பேற்றதிலிருந்து, கடந்த மூன்று ஆண்டுகளில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், ஆசிரியர் தேர்வு வாரியம் ஆகிய தேர்வு முகமைகள் வாயிலாக 32 ஆயிரத்து 774 நபர்களுக்குப் பல்வேறு அரசுத் துறைகளில் நேரடிப் பணி நியமனங்கள் வழங்கப்பட்டன. அதேபோல், உள்ளாட்சி அமைப்புகள், அரசுத் துறை நிறுவனங்கள் போன்ற பல்வேறு அரசு அமைப்புகளில், 32 ஆயிரத்து 709 இளைஞர்கள் பணி நியமனம் பெற்றனர்.

மொத்தம் 65 ஆயிரத்து 483 இளைஞர்களுக்கு கடந்த 3 ஆண்டுகளில் அரசுப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அரசுத் துறைகளில் மட்டுமல்லாது, பெருந்தொழில் மற்றும் குறு, சிறு நிறுவனங்களின் மூலமாகவும் ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தந்துள்ளோம். நமது அரசு மேற்கொண்ட பல்வேறு முன்னெடுப்புகளின் காரணமாகவும், மிகச் சிறப்பான முறையிலே நடத்தி முடிக்கப்பட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாடுமூலம் கிடைக்கப் பெற்ற பெரும் முதலீடுகள் காரணமாகவும் இலட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள் கடந்த 3 ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வெறும் வார்த்தையாக அல்ல, ஆதாரங்களோடுதான் இதனை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழ்நாட்டில் கடந்த 3 ஆண்டுகளில் அமைப்புசார்ந்த தனியார் துறைகளில் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் குறித்த புள்ளிவிவரங்கள் ஒன்றிய அரசின் தொழிலாளர் வைப்பு நிதி நிறுவனத்தின்மூலம் பெறப்பட்டன. இது ஒன்றிய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின்கீழ் செயல்படும் ஓர் அமைப்பாகும். இந்த நிறுவனத்தின் தரவுகளின்படி, கடந்த 3 ஆண்டுகளில் மொத்தம் 77 இலட்சத்து 78 ஆயிரத்து 999 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. அவர்களுக்குத் தொழிலாளர் வைப்பு நிதி கணக்குகளும் தொடங்கப்பட்டுள்ளன.

முற்பகல் 10–50

இதுமட்டுமின்றி, என்னுடைய கனவுத் திட்டம் என்று நான் எப்போதும் பெருமையோடு குறிப்பிடக்கூடிய "நான் முதல்வன் திட்டம்" மூலமாகச் சிறப்பு பயிற்சிகள் தரப்பட்டு வருகின்றன. இதன்மூலம் படித்த இளைஞர்களின் திறன்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலமாக இதுவரை, 3 இலட்சத்து 6 ஆயிரத்து 459 நபர்களுக்குத் தனியார் துறைகளில் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. *(மேசையைத் தட்டும் ஒலி)* அதேபோல, தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலத் துறையின் மூலமாக நடத்தப்பட்ட சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் மூலமாக கடந்த